IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No. 97/2013**

| DEPOSITION OF WITNESS | PW.2 |
|---|---|

| NAME | குழந்தை | TALUK | |
|---|---|---|---|
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | CASTE | |
| VILLAGE | | OCCUPATION | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 04.11.2023

5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை

1.எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை ஏதும் வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை வெங்கடேசன் என்பவர் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கை வெங்கடேசன் தாக்கல் செய்துள்ளார் என்று 2013 ம் ஆண்டிலிருந்து எனக்கும் தெரியும். வாதி என்னிடம் 2013 ம் ஆண்டில் வழக்கை பற்றி என்னிடம் சொல்லி இருக்கிறார்.

2.நானும் வாதியும் முக்குன்றம் கிராமத்தை சேர்ந்தவர் தான். நானும் வாதியும் எப்.சி.ஐ யில் பணி புரிந்தவர்கள் என்றால் சரிதான். முக்குன்றம் கிராமத்திலிருந்து நானும் வாதியும் சென்னையில் குடியிருந்து வந்தோம் தற்போது சென்னையில் போரூரில் குடியிருந்து வருகிறோம்.

3.வாதி லட்சுமி அம்மாளின் மருத்துவ சான்றிதழ்களை நான் பார்த்தது இல்லை. எந்த மருத்துவமளையில் சிகிச்சை எடுத்து கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. லட்சுமி அம்மாள் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்ததாக வெங்கடேசன் என்னிடம் 2013 க்கு பிறகு கூறினார். இந்த விவரத்தை எனது முதல் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4.தாவா சொத்திற்கு சம்பந்தமான ஆவணங்களை நான் பார்த்தது இல்லை. தாவா சொத்திற்கு சம்பந்தமான வருவாய்த்துறை ஆவணங்களை நான் பார்த்தது இல்லை. எந்தெந்த சர்வே எண் சம்பந்தமான சொத்திற்காக வழக்கு தாக்கல் விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து விவரம் எனக்கு தெரியாது என்றாலும் வெங்கடேசன் எனது பக்கத்து வீட்டுகாரர் என்பதால் அவர் கேட்டு கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5.தாவா "எ" அட்டவணை சொத்து லட்சுமி அம்மாள் சுயமாக சம்பாதித்த சொத்து என்றாலும் இவ்வழக்கிற்காக லட்சுமி அம்மாளின் சுய சம்பாதித்த சொத்து இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. லட்சுமி அம்மாள் நல்ல உடல்நிலை மற்றும் நல்ல மனநிலையில் தான் இருந்தார்கள் என்றாலும் வழக்கிற்காக வட்சுமி அம்மாள் நல்ல உடல்நிலை இல்லை என் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல.

6.எனது முதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

(2, 3, 6 முதல் 12, 14, பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் மேற்கண்ட 5 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கின்றனர்)

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.